வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— மலர்விழி

தேதி 24.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவும், இங்கிலாந்தும் இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்த்தில் கையெழுத்திட்டுள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு, நாளை மாலத் தீவுக்கு செல்கிறார்.

நாடு முழுவதும் தூய்மையான எரிசக்தியின் பயன்பாடு பெருமளவு அதிகரித்து இருப்பதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள் தங்களது மொபைல் எண்களை புதுப்பிப்பது தொடர்பாக போக்குவரத்து ஆணையர் டாக்டர் சிவக்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மோடி 1 (6)

இந்தியாவும்-இங்கிலாந்தும் இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மருடன் நடைபெற்ற சந்திப்பை தொடர்ந்து, பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா-இங்கிலாந்து இடையேயான இருதரப்பு உறவுகளில் இன்று ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நாளாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ளார். இதுகுறித்த ஒருசெய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

மோடி 2 (14)

வாய்ஸ்

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், பல ஆண்டுகால கடின உழைப்புக்கு பிறகு, இருநாடுகளுக்கும் இடையிலான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததில் தமக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் இந்தியா மற்றும் இங்கிலாந்துக்கு வளமான முன்னேற்றம் பெற வழிவகுக்கும் என்றும், இந்திய ஜவுளித் துறை, காலனிகள், ரத்தினங்கள், நகைகள், கடல் உணவு மற்றும் மின்னனு பொருட்கள் போன்றவை இங்கிலாந்தில் சிறப்பான முறையில் சந்தை வாய்ப்புகளை பெறும் என்றும் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் இந்தியாவின் இளைஞர்கள், விவசாயிகள், மீனவர்கள், மற்றும் சிறு-குறு தொழில் துறைகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவுத் தொழில், இங்கிலாந்து சந்தையில் புதிய வாய்ப்புகளை பெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மோடி மாலத்தீவு (10)

பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு, தனது பயணத்தின் 2 ஆம் கட்டமாக, நாளை மாலத் தீவுக்கு செல்கிறார். இது பிரதமரின் 3 ஆவது மாலத் தீவு பயணம் ஆகும். அங்கு நாளை மறுநாள் நடைபெறும் மாலத்தீவின் 60 ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இந்த பயணத்தின் போது அவர், மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது முய்சுவை சந்தித்து, இருநாடுகளுக்கு இடையே பரஸ்பர உறவை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். பிரதமரின் இந்த பயணம் குறித்து மாலத்தீவுக்கான இந்திய உயர் ஆணையர் திரு ஜி பாலசுப்பிரமணியன் கூறுகையில்……..

(வாய்ஸ்)

மக்களவை- ஹர்திப் சிங் புரி (8)

நாடு முழுவதும் தூய்மையான எரிசக்தியின் பயன்பாடு பெருமளவு அதிகரித்து இருப்பதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி தெரிவித்துள்ளார். மக்களவையில் இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், 2014 ஆம் ஆண்டு 25 லட்சமாக இருந்த இயற்கை எரிவாயு இணைப்புகள் தற்போது 1.5 கோடியாக அதிகரித்துள்ளது என்றார். அதேபோல சமையல் எரிவாயு இணைப்புகளின் எண்ணிக்கையும், 33 கோடியாக அதிகரித்துள்ளது என்றார். உயிரி எரிபொருள் பயன்பாட்டில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முருகன் (16)

இந்தியாவில் 1.55 லட்சத்திற்கும் அதிகமான பத்திரிக்கை வெளியீடுகள் மற்றும் தொள்ளாயிரத்து எட்டு தனியார் சேனல்களின் பங்களிப்பால் துடிப்பான பத்திரிக்கை மற்றும் ஊடக சூழல் அமைப்பு உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று மக்களவையில் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார். 2014-15 ஆம் ஆண்டில் 1.05 லட்சமாக இருந்த பத்திரிக்கை வெளியீடு, 2024-25 ஆம் ஆண்டில் 1.55 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும், தனியார் செயற்கை கோள் தொலைக்காட்சி சேனல்களின் எண்ணிக்கை 2014-15 ஆம் ஆண்டில் 821 லிருந்து 2024-25 ஆம் ஆண்டில் தொள்ளாயிரத்து எட்டாக அதிகரித்துள்ளது என்றும் கூறினார். தற்போதைய நிலவரப்படி, டிடி ப்ரீ டிஷ்ஷில் 92 தனியார் சேனல்கள் மற்றும் 50 தூர்தர்ஷன் சேனல்கள் கிடைப்பதாக தெரிவித்த அவர், பல்வேறு மொழி சேனல்களில் தொலைதூர மக்களையும் சென்றடைவதாக கூறினார். நாடு முழுவதும் பிரசார் பாரதியின் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில், ஒளிபரப்பு, உள்கட்டமைப்பு மற்றும் நெட்வொர்க் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக டாக்டர் எல் முருகன் தெரிவித்தார்.

*ராணுவ பேச்சுவார்த்தை (8)*

புதுடெல்லியில் ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துருவேதியுடன் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமை இயக்குநர் மேஜர் ஜெனரல் அமீர் பரம் சந்தித்து பேசினார். இந்த பேச்சுவார்த்தை இந்தியா-இஸ்ரேல் இடையிலான ராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று இந்திய ராணுவ தலைமையகம் வெளியிட்டுள்ள சமூக வலைபதிவில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆசிய கண்டத்தில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து இருவரும் ஆலோசித்ததாகவும், பிராந்திய நிலைத்தன்மையை மேம்படுத்த இருநாடுகளும் உறுதி பூண்டுள்ளதாகவும் அந்த பதிவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஆர்டிஓ மொபைல் எண் (11)*

புதுச்சேரியில் உள்ள வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள் தங்களது மொபைல் எண்களை தேசிய VAHAN மற்றும் SARATHI இணையதளங்களில் புதுப்பிக்க வேண்டும் என புதுச்சேரி போக்குவரத்து துறை ஆணையர் டாக்டர் சிவக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், parivahan.gov.in என்ற இணையதளத்தின் மூலம் தங்களது ஆதாரில் இணைக்கப்பட்ட மொபைல் எண் மூலம் பாதுகாப்பாக புதுப்பிக்கலாம் என்றார். இதற்கான சிறப்பு இயக்கம் 3 மாதங்களுக்கு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் விவரம் தேவைப்படுவோர் அருகில் உள்ள ஆர்டிஓ அலுவலகத்தை அணுகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*பெண் விஞ்ஞானி (8)*

விரைவாக மகசூல் பெறும் மிளகு பயிரை புதுச்சேரி கூடப்பாக்கத்தை சேர்ந்த பெண் வேளாண் விஞ்ஞானி ஸ்ரீலட்சுமி உருவாக்கி உள்ளார். இதுகுறித்து அவர் நமது செய்தியாளரிடம் கூறுகையில், பொதுவாக மிளகு பயிர் செய்யப்பட்ட 5 ஆண்டுகளுக்கு பிறகே மகசூல் தரும் என்றும்,

ஆனால் தற்போது தான் கண்டுபிடித்திருப்பது 18 மாதத்தில் 100 சதவிகித மகசூல் தரும் என்றும் கூறினார். திசு வளர்ப்பு மூலம் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த மிளகு பயிரை தாம் கண்டறிந்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்.......

(வாய்ஸ்)

*காரைக்கால் கருத்தரங்கு* (8)

அடுத்த மாதம் 8 ஆம் தேதி காரைக்காலில் நடைபெற உள்ள வரலாற்றில் காரைக்கால் என்ற தலைப்பிலான கருத்தரங்கிற்கு கட்டுரைகளை சமர்பிக்கலாம் என்று புதுச்சேரி தமிழ் வளர்ச்சி சிறகம் சார்பில் அறிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், காரைக்கால் வரலாறு தொடர்பான கட்டுரைகளை அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்குள் தமிழ் வளர்ச்சி சிறகத்தின் மின்னஞ்சல் முகவரியான tamilvalarchiciragam2024@gmail.com அல்லது வாட்ஸ் அப் எண்ணான 093 6096 2442 க்கு அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஸ்டாலின்* (9)

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நலமுடன் இருப்பதாக சென்னை அப்பல்லோ மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக அமைச்சர் திரு துரைமுருகன் மருத்துவ பரிசோதனைக்கு பிறகு முதலமைச்சர் நலமாக இருப்பதாகவும், அவர் எப்போது டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்பது குறித்து மருத்துவர்கள் உறுதி செய்வார்கள் என்றும் தெரிவித்தார். சில நாட்களுக்கு முன்பு லேசான தலைசுற்றல் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அனுமதிக்கப்பட்டார்.

மும்பை குண்டுவெடிப்பு (12)

2006 ஆம் ஆண்டு மும்பை ரயில் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 12 பேரையும் விடுவித்த மும்பை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 12 பேரை விடுவித்த மும்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மகராஷ்டிர அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. வழக்கு விசாரணையின் போது, மகராஷ்டிர அரசு சார்பில் ஆஜரான இந்திய சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ள சில கருத்துக்களால் மகராஷ்டிராவில் நிலுவையில் உள்ள பிற வழக்கு விசாரணைகளையும் பாதிக்க வாய்ப்புள்ளது என கூறி, உயர்நீதிமன்ற தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு கோரிக்கை வைத்தார்.

வருமான வரி (13)

வருமான வரி தினம் இன்று கொண்டாடப்பட்டது. ஆங்கிலேய ஆட்சியின் போது 1960 ஆம் ஆண்டு இதே நாளில் இந்தியாவில் வருமான வரிசட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவுகூறும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி, மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், வருமான வரி என்பது நாட்டின் பொருளாதார கட்டமைப்புக்கு முதுகெலும்பாக திகழ்கிறது என தெரிவித்துள்ளார். வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்தவும், உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும் வருமான வரி மூலம் கிடைக்கும் நிதி பேருதவியாக உள்ளது என்று திரு பங்கஜ் சவுத்ரி குறிப்பிட்டுள்ளார். நாட்டை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வதற்கு உந்து சக்தியாக திகழும் வரி செலுத்துவோர் அனைவருக்கும் இத்தினத்தில் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் பதிவிட்டுள்ளார்.

*அமர்நாத் யாத்திரை (8)*

கடந்த 21 நாட்களில் 3.42 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் அமர்நாத் யாத்திரை மேற்கொண்டுள்ளனர். அதே நேரத்தில், 3 ஆயிரத்து 500 பேர் கொண்ட, 22 ஆவது யாத்ரீகர்கள் குழு ஜம்முவில் உள்ள பகவதி நகர் பக்தர்கள் முகாமில் இருந்து அமர்நாத்திற்கு இன்று புறப்பட்டுள்ளனர். பக்தர்கள் அமைதியாகவும், சுமுகமாகவும் யாத்திரை மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதம் 3 ஆம் தேதி தொடங்கிய அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 9 ஆம் தேதி வரை 38 நாட்கள் நடைபெறுகிறது.

*வானிலை (11)*

வங்கக் கடல் பகுதிகளில் இன்று அதிகாலை உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று, அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு வங்கம் மற்றும் வடக்கு ஒடிசா கடற்கரை பகுதிகளை நோக்கி நகரக் கூடும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்காலிலும் அடுத்த 3 நாட்களுக்கு இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.